
# புலமை அறிவு



## தரம் 5

**2020 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை 05**


ஆசிரியர்

**திரு. ந. மனோகரன் BA, Dip in Teach , SLTS II**

(புலமை அறிவு வினாத்தாள் ஆசிரியர் -

(புலமைச் சுடர், மலைமுரசு, ஒளி அரசு புலமைப் பரிசில், கிழக்கு மாகாணம் - வினாத்தாள் ஆசிரியர்)

தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)


**MISTAKES**
ARE PROOF THAT
YOU ARE
**TRYING**

**மாணவர் பெயர்**


.............................................................................


| புள்ளித்திட்டம் | |
|---|---|
| பகுதி I | |
| பகுதி II | |
| மொத்தம் | |

- **01ஆம், 02ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள புதிர்ப் பாடல்களைக் குறிக்கும் உருவத்தைத் தெரிவு செய்க.**

01. சொன்னதைச் சொல்லும் பறவை
நான் சொண்டால், பழத்தை சுவைத்திடுவேன்
நான் யார்? நான் யார்?


1)


2)


3)


02. நீலம், பச்சை, மஞ்சள், செம்மை நிறமும்
மாறுது – செடி நிறத்திற்கேற்ப
வண்ணம் பல நிறமும் சேருது.



1)



2)



3)


- **03, 04 ஆம் வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.**


03.

……………


1)



2)


3)


04.

………………..


1)


2)


3)


- **பின்வரும் பாடலை நன்றாக வாசித்து சரியான விடையைத் தெரிவு செய்க.**


05)



உருவிலுள்ள சதுரங்கள் எத்தனை?

1) 04 2) 06 3) 10

06)





நிழற்றிய பகுதிக்கு பொருத்தமான விலங்கு

1. ஒட்டகம் 2. கிவி 3. தவளை

- **எண்கோலங்களை விளங்கி வினாக்குறி இடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்து கோடிடுக.**

07)





1) 6

2) 7

3) 8

08)





1) 6

2) 5


3) 9

- **சரியான விடையைத் தெரிவு செய்க.**




09)  இன் பெறுமானம் யாது ?

1) 6 2) 7 3) 8


10)  இன் பெறுமானம் யாது ?

1) 9 2) 7 3) 8

- **கீழுள்ள பாடலைக் கொண்டு விடையைத் தெரிவு செய்க.**

இந்த உலகில் நீங்கள்
    இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
    தருமம் ஒன்றே பெரிது

11) இப்பாடலின் பிரதான கருத்து
   1) பணிகள் பல செய்ய வேண்டும்
   2) மிகப்பெரிய தருமம் தந்தை தாயைப் பேணுதல்
   3) உலகில் தருமம் செய்தல் சிறந்தது

12) 


இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின்எண்ணிக்கை யாது ?
   1) 3
   2) 4
   3) 6


13) பின்வரும் எண்கோலங்களில் காணப்படுகின்ற இடைவெளியில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.


| | | |
|---|---|---|
| 20 | 5 | 15 |
| 8 | 4 | 4 |
| 15 | | 9 |

   1) 3
   2) 4
   3) 6

- **உருவில் தரப்பட்ட விலைகளுக்கேற்ப விடையைத் தெரிக.**


ரூ 96.00


ரூ 210.00


ரூ 93.00

14) பந்து ஒன்றின் விலை யாது ?
   1) ரூ 50.00    2) ரூ 48.00    3) ரூ 45.00

15) துடுப்பொன்றின் விலை யாது ?
   1) ரூ 155.00    2) ரூ 165.00    3) ரூ 145.00

16) மூன்று பந்துகளையும் ஒரு தொப்பியும் வாங்கும் ஒருவர் வியாபாரிக்கு ரூ 500.00 ஐக் கொடுத்தால், அவருக்கு கிடைக்கும் மிகுதிப்பணம்

1) ரூ 248.00 2) ரூ 234.00 3) ரூ 311.00


17) யாருமற்ற மனிதனை இறைவனே காப்பாற்றுவான். இதற்குப் பொருத்தமான பழமொழி

1) திக்கற்றவனுக்கு தெய்வமே துணை
2) நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது.
3) கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

18) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து எனும் பழமொழியின் கருத்து

1) இடைவிடாது முயற்சி செய்து கற்க வேண்டும்
2) இளமைக்கால பழக்கம் சிறந்தது.
3) இளமைக் காலத்தில் கல்வி கற்பது சிறந்தது.

- **தராசுகளில் காணப்படும் பொருட்களின் நிறைகளை அவதானித்து மிகச்சரியான விடைகளைத் தெரிவு செய்க.**




19) அன்னாசிப் பழத்தின் நிறை 750g எனின், பப்பாசிப் பழத்தின் நிறை எவ்வளவு ?

1) 750g 2) 250g 3) 1kg 250g

20) பொருட்களின் நிறைகளுக்கேற்ப அவற்றை ஏறுவரிசையில் எழுதினால் வரும் விடையைத் தெரிவு செய்க.

1) பப்பாசிப்பழம், பூசனிக்காய், அன்னாசி
2) பூசனிக்காய், அன்னாசி, பப்பாசிப்பழம்
3) பப்பாசிப்பழம், அன்னாசி, பூசனிக்காய்

21) நோயாளி ஒருவருக்கு 30 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒன்று வீதம் உட்கொள்வதற்கு ஐந்து மருந்து வில்லைகள் வழங்கப்பட்டன. வில்லைகளை உட்கொள்ள நோயாளிக்கு எடுக்கும் மொத்த நேரம் யாது ?

1) 2 மணித்தியாலம்
2) 2 மணித்தியாலம் 30 நிமிடம்
3) 3 மணித்தியாலம்

22) பண்ணையொன்றிலிருந்து ஆடு, மாடு, கோழி ஆகிய பிராணிகளின் கால்களின் எண்ணிக்கை 24 ஆகும். பண்ணையில் இருந்த கோழிகளின் எண்ணிக்கை பின்வருவனவற்றுள் எது ?

1) 5 2) 7 3) 8


23) மீனவனுக்கு கடல் போன்று விளையாடுபவனுக்கு …………….

1) மைதானம் 2) பந்து 3) துடுப்பு


24) ஆசிரியருக்கு மாணவன் போன்று மருத்துவருக்கு ………..

1) பொதுமக்கள் 2) நோயாளி 3) தாதி

25) இவ்வுருவில் உள்ள செவ்வகங்கள் எத்தனை ?




1) 11
2) 10
3) 9

26) 

இம்முக்கோணியில் நிழற்றியுள்ள பகுதியை போல எத்தனை துண்டுகள் வெட்டி எடுக்கலாம் ?

1) 4
2) 6
3) 8

- **வரிப்படத்தினால் காட்டப்படும் தகவல்களைக் கொண்டு வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.**




27) வாசிப்பில் மட்டும் விருப்பமுள்ளவர்கள் எத்தனை பேர் ?

1) 7 பேர் 2) 3 பேர் 3) 8 பேர்

28) தொலைக்காட்சி பார்ப்பதில் மட்டும் விருப்பமுள்ளவர்கள் எத்தனை பேர் ?

1) 7 பேர் 2) 5 பேர் 3) 4 பேர்

29) தொலைக்காட்சி பார்த்தல், வாசிப்பு, விளையாட்டு ஆகிய மூன்றிற்குமே பொதுவாக விருப்பமுள்ளவர்கள் எத்தனை பேர் ?

1) 6 பேர் 2) 7 பேர் 3) 8 பேர்

30) சுமதியின் அண்ணன் பொது அறிவு வினாக்களுக்கு விடையளிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். அவனை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஒரு நாள் சுமதியின் வீட்டிற்கு வந்த நண்பியின் தங்கை கேட்ட பொது அறிவுக் கேள்விக்கு சுமதியின் அண்ணனால் விடை கூற முடியவில்லை. இந் நிகழ்விற்குப் பொருத்தமான பழமொழி எது ?


1) நிறை குடம் தளம்பாது
2) ஆனைக்கும் அடிசறுக்கும்
3) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்


31) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. இப்பழமொழிக்குப் பொருத்தமான கருத்து
   1) விடாமுயற்சி பலன் தரும்.
   2) பலசாலியும் தோல்வியடையலாம்
   3) ஒற்றுமையே பலம்.


32) சரளா திறமையான மாணவியாக இருந்தாலும் இறுதித் தவணைப் பரீட்சையில் அவள் கணித பாடத்தில் குறைவாக புள்ளிகள் பெற்றாள். இதற்கு காரணம் எதுவாக இருக்கலாம் ?
   1) கணித வினாத்தாள் கடினமாக இருந்ததால்.
   2) உரிய கணித வினாக்களை எழுத நேரம் போதாமையால்
   3) கணித வினாத்தாளை எழுத போதிய ஆயத்தமில்லாததால்

33) கமல், விமல் ஆகிய இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை 26 வருடங்கள் ஆகும். அவர்களுக்கிடையே வயது வித்தியாசம் 4 வருடங்கள். ஆகவே இருவரது வயதுகளும் எத்தனை ?
   1) கமல் 16, விமல் 16    2) கமல் 12, விமல் 14    3) கமல் 11, விமல் 15

- **கீழே தரப்பட்ட தரவுகளைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**








34) இதற்கேற்ப மங்குஸ்தான் பழமொன்றின் விலை யாது ?
   1) ரூபா 15.00    2) ரூ 20.00    3) ரூ 25.00

35) வாழைப்பழமொன்றின் விலை யாது ?
   1) ரூ 25.00    2) ரூ 20.00    3) ரூ 15.00

- **கீழேயுள்ள சொற் கோலத்தை அவதானித்து புள்ளிக் கோடிடப்பட்ட இடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.**

36) பதவி → வித்து → தம்பு → ………..
   1) புத்தகம்    2) புடைவை    3) தும்பி

37) மதி → திக்கு → குடம்பி → ………..
   1) பிறப்பு    2) பித்தப்பை    3) குடம்

38) சமுத்திரம் : நீர் எனின், பாலைவனம் : ........................ ஆகும்.
   1) வெயில்    2) மணல்    3) ஒட்டகம்

39) பழத்தில் சுவை போல பூவில் ……….
   1) இதழ்    2) மணம்    3) சுளை

40) நோய் : மருந்து எனின், பசி : ............. ஆகும்.
   1) சோறு    2) உணவு    3) பழங்கள்

# செய்கை வேலைக்கான பகுதி

**01. பின்வரும் பந்தியை வாசித்து விடை தருக.**

அமைச்சரின் கூற்று துரியோதனனைச் சிந்திக்கத் தூண்டியது. எனவே துரியோதனன் அமைச்சரிடம் ''நானும் கர்ணனைப்போல் புகழ்பெற யோசனை ஒன்று கூறுங்கள்'' என்று கேட்டார். ''மகா பிரபுவே! நாளை முதல் நாங்களும் கர்ணனைப்போல் கேட்பவர்க்கு இல்லை என்று கூறாது கொடுக்கத் தொடங்கிவிடுங்கள். உங்களுக்குக் 'கொடைவள்ளல்' என்ற புகழ் கிடைத்துவிடும்'' என்று ஆலோசனை கூறினார் அமைச்சர்.

1. கொடை வள்ளல் யார்? ………..…………………..….
2. உவமைத் தொடரினை எழுதுக? ………..…………………..….
3. காலப் பெயர்ச் சொல்? ………..…………………..….
4. மன்னனைத் சிந்திக்க தூண்டியது எது? ………..…………………..….
5. இரப்போர்க்கு இல்லையென்னாது வாரி வழங்குபவன் யார்? ………..…………………..….
6. இகழ் என்பதன் எதிர்க்கருத்து? ………..…………………..….
7. புகழ் பெற யோசனை கேட்டவர் யார்? ………..…………………..….
8. முன்னிலை பன்மைச் பெயர்ச் சொல்? ………..…………………..….
9. மன்னனுக்கு ஆலோசனை கூறியவர் யார்? ………..…………………..….
10. தன்மை ஒருமைப் பெயர்ச் சொல்? ………..…………………..….


**02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**


1. அப்பா வந்ததும் அம்மா கதவைத் ………. ( திரந்து / திறந்து ) வரவேற்றார்.
2. விளையும் பயிரை ……. தெரியும் என்பது பழமொழியாகும். (முளையிலே / முலையிலே)
3. தசரத மன்னன் நீதி தவறாது ………. செய்தான். ( ஆட்ச்சி / ஆட்சி )
4. நான் …………….. வணங்கினேன். ( கடவுலை / கடவுளை )
5. எங்கள் பாடசாலையின் வருடாந்த …….. விழா இடம்பெற்றது. ( பரிசளிப்பு / பரிசலிப்பு)
6. உங்கள் பசு எங்கள் ………. முட்டியது. ( காலையை / காளையை)

**03. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினை தமிழில் எழுதுக.**

1. I am hungry : ………………………………………………………………
2. How are you ? : ………………………………………………………………

**04. தரப்பட்ட படங்களுக்குரிய பெயரின் ஆங்கில உச்சரிப்பை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**





.................................................................... ....................................................................

**05. சிங்கள வாக்கியத்தின் கருத்தினை தமிழில் எழுதுக.**

1. கபுடா களு பாடய் : ..........................................................
2. கிரி பொன்ன : ..........................................................

**06. எழுவாய்ச் சொல்லுக்குப் பொருத்தமான பயனிலைச் சொல்லைத் தெரிவு செய்க.**

1. அவர்கள் நேற்றுப் பாடசாலைக்கு …….. ( வரவில்லை / வருவார்கள் )
2. ரைட் சகோதரர்கள் புராதன காலத்தில் விமானத்தைக் கண்டு ……. (பிடிப்பார்கள் / பிடித்தார்கள் )
3. காகங்கள் அதிகாலையில் இரை தேடிப் ……….. ( பறந்தன / பறந்தது )
4. நேற்று சூரியன் கிழக்கில் ……… ( உதிக்கும் / உதித்தது )
5. கடந்த திங்கட்கிழமை அன்று பாடசாலையில் பரிசளிப்பு விழா ………… ( இடம்பெறும் / இடம்பெற்றது )

**07. கீழ்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தரப்பட்ட சொற்களில் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

**( உதிர்ந்தன, விவசாயிகள், உண்டார்கள், கட்டில், நடந்தது, அப்பா )**

1. அஃறிணை, ஒன்றன்பால் ஒருமை இறந்தகால வினைச்சொல் எது ? ..............................
2. உயர்திணை, பலர்பால், பன்மைப் பெயர்ச்சொல் எது ? ..............................
3. அஃறிணை ஒருமைப் பெயர்ச்சொல் எது ? ..............................
4. உயர்திணை ஆண்பால் பெயர்ச் சொல் ? ..............................
5. அஃறிணை பன்மை இறந்தகால வினைச் சொல்? ..............................

07. சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

1. நண்பர்களுடன் ........................................................................ விருந்தல் கலந்துகொண்டோம் (தேனீர் / தேநீர்)
2. மழை பெய்ததால் ........................................................................ ஏற்பட்டது (வெல்லம் / வெள்ளம்)
3. எனக்கு தலை ........................................................................யாக இருந்தது (வலி / வழி)
4. காலைவேளையில் ........................................................................யாக இருந்தது (பனி / பணி)
5. அண்ணா ........................................................................ மாதத்தில் பிறந்தான் (ஆனி / ஆணி)

08. **“எனது பாடசாலை”** என்ற தலைப்பில் சரியான எழுவாய் பயனிலை புலப்படும் வகையில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாதவாறு அமைத்தல் வேண்டும். (எழுத்துப் பிழைகள் இருப்பின் புள்ளி வழங்கப்படமாட்டாது)

1) ………………………………………………………………………………..

………………………………………………………………………………..

2) ………………………………………………………………………………..

………………………………………………………………………………..


3) ………………………………………………………………………………..

………………………………………………………………………………..

**09. தரப்பட்ட வெற்றிடத்தில் விடையை எழுதுக.**

1) **8790** என்ற இலக்கத்தை சொற்களில் எழுதுக.

…………………………………………………………………………………....

2) 

இப்பெட்டியினுள் காணப்படும் பென்சில்களின் எண்ணிக்கையை உரோம எண்ணில் தருக.


……………………..……………………

3) பாடசாலை ஆரம்பித்த நேரம் மு.ப 7.30 மணியாகும். எனினும் நாதிரா பாடசாலை ஆரம்பித்து 40 நிமிடங்களின் பின்பே பாடசாலைக்கச் சமூகமளித்தாள். அதன்படி நாதிரா பாடசாலைக்கு சமூகமளித்த நேரம் யாது ?

…………………………………………………………………………………....

4) A எனும் தோட்டத்தில் இருந்து பறித்த தேங்காய்களின் எண்ணிக்கை 3670 ஆகும். B எனும் தோட்டத்தில் இருந்து பறித்த தேங்காய்களின் எண்ணிக்கை 3440 ஆகும். எனில், இரு தோட்டங்களிலும் பறித்த தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது ?

……………………………………………………………………………………….....

5) 

இவ்வுருவில் காணப்படுகின்ற செங்கோணங்களின் எண்ணிக்கை யாது ?

…………………………..………………………………………...

6) ஒரு முட்டையின் விலை ரூபா 18.00 எனின், ரூபா 108.00 க்கு எத்தனை முட்டைகள் வாங்க முடியும் ?

……………………………………………………………………………………….....

7) 3 லீற்றர் கொள்ளக்கூடிய போத்தலை 200 மில்லி லீற்றர் கோப்பையினால் எத்தனை முறை ஊற்றி நிரப்ப முடியும் ?

……………………………………………………………………………………….....

8) இவ்வுருவின் சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.



9) தற்போது இலங்கையில் புழக்கத்தில் உள்ள மிகப் பெறுமதி கூடிய நாணயத்தாள் எது?

……………………………………………………………………………………….....

10) கூட்டுக.

15kg 350g
20kg 550g

______________

11) மாணவன் ஒருவன் பாடசாலையில் இருந்து 8m வடக்கே சென்று பிரதான வீதியை அடைந்தான். பின் அங்கிருந்து 14m மேற்கே சென்று தனது வீட்டை அடைந்தான். பாடசாலைக்கு எத்திசையில் வீடு அமைந்துள்ளது ?


……………………………………………………………………………………….....

12) 

இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னத்தில் தருக.

……………………………………………………………….

- **வாரம் ஒன்றின் முதல் நான்கு நாட்களுள் பாடசாலைக்கு வந்த தரம் 5 மாணவர்களின் வரவு வரைபில் காட்டப்பட்டுள்ளது.**




13) வெள்ளிக்கிழமைக்கான வரவு 50 எனின், அதனை வரைபில் குறித்துக் காட்டுக.

14) மிகக்கூடிய வரவிற்கும் மிகக் குறைந்த வரவிற்கும் இடையேயுள்ள வித்தியாசம் எவ்வளவு?

………………………………………………………………………………………..….

15) பாடசாலைக்கு மாணவர்கள் சமமாக வருகை தந்த தினங்கள் எவை ?

………………………………………………………………………………………..….

**10. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. இறைச்சியை மாத்திரம் உண்ணும் விலங்கினம்
   1) ஒட்டகம் 2) ஓநாய் 3) பூனை 4) எலி

2. 

அருகில் தரப்பட்ட உலர் உணவு பைக்கற்றை கொள்வனவு செய்யும் போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் எது ?
   1) காலாவதியாகும் திகதி
   2) உற்பத்தித் திகதி
   3) பொருளின் நிறை
   4) பொருளின் விலை


3. உரோமங்களால் உடல் மூடப்பட்டுள்ள விலங்கினம் அல்லாதது
   1) அணில் 2) குரங்கு 3) பாம்பு 4) முயல்

4. பத்துக் கால்கள் கொண்ட பிராணிகள்
   1) இறால், நண்டு 2) கரப்பான், எறும்பு
   3) தேனீ, வெட்டுக்கிளி 4) சிலந்தி, பூரான்

5. உருவில் உள்ள இலச்சினை குறிப்பது
   1) ஸ்ரீலங்கா டெலிகொம்
   2) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
   3) இலங்கைக் கட்டளைகள் பணியகம்
   4) தொல்பொருள் திணைக்களம்

6. சூரியனுக்கு மிக அண்மையில் அமைந்துள்ள கோளையும் புவிக்கு மிக அண்மையில் அமைந்துள்ள கோளையும் முறையே காட்டும் விடை
   1) புதன், சுக்கிரன் 2) புதன், வியாழன்
   3) வியாழன், சனி 4) சனி, சுக்கிரன்

7. நீருடன் நன்கு கலக்கக்கூடிய திரவம்
   1) மண்ணெண்ணெய் 2) பெற்றோல் 3) வினாகிரி 4) தேங்காயெண்ணெய்

8. வீட்டில் மின் விளக்கிற்கு அருகில் காணக்கூடிய பிராணி
   1)  2)  3)  4) 

9. மஞ்சள் நிறப் பூ வகை
   1) கொன்றை 2) மல்லிகை 3) கத்தரி 4) மிளகாய்

10. முட்டையிட்டு இனம் பெருக்கும் பிராணி அல்லாதது



2) 

3) 

4) 

11. கண்கள், காதுகள் இரண்டையும் பயன்படுத்தித் தகவல்களைப் பெறக்கூடிய ஊடகம்,
    1) ஒலிபெருக்கி  2) தொலைக்காட்சி
    3) சுவரொட்டி  4) செய்திப்பத்திரிகை

12. வாழைப் பூவை நாடி வரும் பிராணி
    1) தேன்சிட்டு  2) ஆந்தை  3) முயல்  4) அணில்

13. மாலை வேளையில் பூக்கும் பூக்கள் எது ?
    1) கடும்புல்  2) தாமரை  3) அந்திமந்தாரை  4) செவ்வரத்தை

14. பின்வருவனவற்றுள் தனது வாழ்விடமாக புற்றை அமைக்கும் பிராணி
    1) பாம்பு  2) கறையான்  3) தேனீ  4) மண்புழு

15. எதிரியிடமிருந்து தப்பிப்பதற்காக தனது உடலை கித்துள் வித்துப் போல மாற்றும் பிராணி யாது ?
    1) ஆமட்டில்லா  2) மரவட்டை  3) அட்டை  4) ஆமை

16. 

அருகில் தரப்பட்டுள்ள விளையாட்டை விளையாடுவதற்கு ஒரு அணியில் பங்கு கொள்ளும் வீரர்களின் எண்ணிக்கை
    1) 10
    2) 11
    3) 16
    4) 6

17. பாரமான உணவையும் எடுத்துச்செல்லும் பிராணி
    1) ஈ  2) தேனீ  3) எறும்பு  4) குளவி


18. இலங்கையிலுள்ள மாகாணங்களின் எண்ணிக்கை
    1) 9  2) 8  3) 25  4) 12

19. வாகனமொன்றிற்கு எரிபொருள் நிரப்புவதற்குச் செல்ல வேண்டிய இடத்தைக் காட்டும் குறியீடு

1) 

2) 

3) 

4) 

20. மேல் மாகாணத்தில் அமைந்துள்ள மாவட்டம்
1) குருநாகல் 2) இரத்தினபுரி 3) கண்டி 4) கொழும்பு

21. இடத்திற்கு இடம் உடலை மாற்றிக் கொள்ளும் பிராணி
1) கிளி 2) மான் 3) முயல் 4) பச்சோந்தி

22. சிறிய ஒலிகளைக் கேட்கும் தன்மையுள்ள பிராணி
1) முயல் 2) யானை 3) கிளி 4) ஆந்தை

23. நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை
1) பருந்து 2) கிளி 3) புறா 4) மைனா

24. நான்கு பக்கமும் நீரினால் சூழப்பட்ட இடத்தை எவ்வாறு அழைப்பர் ?
1) குடா 2) ஏரி 3) தீவு 4) களப்பு

25. இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள நாடு
1) லண்டன் 2) அமெரிக்கா 3) கனடா 4) இலங்கை


26. இலங்கைக்கு அருகே அமைந்துள்ள நாடு
1) பூட்டான் 2) லண்டன் 3) அமெரிக்கா 4) பிரான்ஸ்


27. இலங்கைக்கு வடக்கே அமைந்துள்ள நாடு
1) பங்களாதேஸ் 2) பாகிஸ்தான் 3) இந்தியா 4) நேபாளம்

28. புத்தகங்களைச் சேதப்படுத்தும் பிராணி அல்லாதது
1) இராமபாணம் 2) எலி 3) கறையான் 4) சில்வண்டு

29. உலக புத்தக தினம் கொண்டாடப்படுவது,
1) ஏப்ரல் 23 2) ஏப்ரல் 14 3) ஏப்ரல் 15 4) ஏப்ரல் 25

30. காதுகளினூடாகத் தகவல்களைப் பெறத்தக்க ஊடகம்

1) 

2) 

3) 


4) 